# கள்ளக்குறிச்சி நகராட்சி

**2020ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை.. திரு என்.குமரன், B.Sc.,**
**தனி அலுவலர் / ஆணையாளர்**

பொருள் எண் – 01

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சிறப்பு சாலை திட்டம் 2020–2021 (SRP 2020-21)–இன் கீழ் ரூ. 200.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு சிப்பமாக தார்சாலைகள் அமைக்கும் பணிக்கு, கள்ளக்குறிச்சி நகராட்சி மன்ற தீர்மானம் எண். 415, நாள். 11.12.2020 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண். 20557/2020/E3 நாள் 15.12.2020இல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண். 23655/2020/DOI நாள். 22.12.2020-ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, அதற்கிணங்க கீழ்க்காணும் **சிப்பம்-I** பணி மேற்கொள்வதற்கு 12.01.2021 ஆம் தேதியன்று ONLINE / OFFLINE முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், ONLINE முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறாததால், OFFLINE முறையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தினை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | ஜேஜே நகர், சுந்தரவிநாயகர் கோயில் தெரு, எம்ஆர்என் குறுக்கு தெருக்கள், விநாயகர் நகர் மெயின் ரோடு விரிவாக்கம், ஏமப்பேர் காலனி தெரு, ராமச்சந்திரா மெயின் ரோடு, கச்சிராயப்பாளையம் சாலை முதல் ஜேஜே நகர் (வார்டு எண்கள் 01,02,10,13,15 மற்றும் 21) பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணி (சிப்பம் 1) | ரூ. 200.00 | **M/s. A.S. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி** | **+5.08 % மதிப்பீட்டிற்கும் அதிகம்** |
| | | | M/s. ஸ்ரீ சுபம் கன்ஸ்ட்ரக்ஷன், கள்ளக்குறிச்சி | +7.63% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டைவிட கூடுதலான விலை விகிதத்தில் இரு ஒப்பந்ததாரர்களும் ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளனர். மேலும், வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி **+5.08%** மதிப்பீட்டைவிட கூடுதலாக அளித்துள்ள **"M/s. A.S. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி"** என்ற நிறுவனத்தாரை L1 ஒப்பந்ததாரராக கருதி, விலைக்குறைப்பு செய்துதர 13.01.2021 அன்று கோரியதில், 18.01.2021 அன்று ஒப்பந்ததாரர் அளித்துள்ள கடிதத்தில், **+5.08%-**லிருந்து அனைத்து இனங்களுக்கும் மதிப்பீட்டைவிட கூடுதலாக **+4.80%-**க்கு செய்து தர சம்மத கடிதம் கொடுத்துள்ளார். மேலும், விலை குறைப்பு செய்துதர, 21.01.2021 அன்று ஒப்பந்ததாரரை கோரியதில், 22.01.2021 அன்று ஒப்பந்ததாரர் அளித்துள்ள கடிதத்தில், தற்போதுள்ள கட்டுமான பொருட்களின் விலையேற்றம், பணிபுரியும் பணியாளர்களின் ஊதிய உயர்வின் காரணமாக, **+4.80%**-லிருந்து அனைத்து இனங்களுக்கும் மதிப்பீட்டைவிட கூடுதலாக **+4.60%**-க்கு செய்து தர இறுதியாக குறைத்து சம்மத கடிதம் கொடுத்துள்ளார். மீண்டும் விலை குறைப்பு செய்துதர 25.01.2021 அன்று கோரியதில், 25.01.2021 அன்று ஒப்பந்தாரர் அளித்துள்ள கடிதத்தில், தற்போதுள்ள கட்டுமான பொருட்களின் கடும் விலையேற்றத்தின் காரணமாகவும், பணிபுரியும் வேலையாட்களின் சம்பள உயர்வின் காரணமாகவும், ஏற்கனவே சம்மத கடிதம் அளித்துள்ள மதிப்பீட்டைவிட கூடுதலாக **+4.60%**-லிருந்து குறைத்து பணியினை செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்.

எனவே, திட்டப்பணியின் அவசர, அவசியத்தினை கருதி, மதிப்பீட்டைவிட கூடுதலாக **+4.60%-**க்கு ஒப்பந்தப்புள்ளி (சம்மத கடிதம்) அளித்துள்ள, **"M/s. A.S. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி"** என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. "**M/s.A.S.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி**" என்ற நிறுவனத்தார் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி (சம்மத கடிதம்) விலை விகிதம் மதிப்பீட்டைவிட கூடுதலாக **+4.60%** என்ற விலைவிகிதத்தினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு கூடுதலாகும் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். / 2020 / இ1 )**

## பொருள் எண் – 02

கள்ளக்குறிச்சி நகராட்சியில் மின்னனு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு, மின்னனு முறையில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை தரவிறக்கம் செய்யவும், Digital Signature Certificate (E-Token)–கள் நகராட்சி ஆணையாளர், நகராட்சி பொறியாளர் மற்றும் பணி மேற்பார்வையாளர் ஆகியோர்களுக்கு புதியதாக வாங்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. மேற்படி மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கான E-Tokenகள் அரசு பதிவு பெற்ற நிறுவவத்தின் மூலம் வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவீனம் ரூ. 15000/– (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்)–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசு பதிவு பெற்ற நிறுவனத்தின் மூலம் நேரடியாக வாங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். / 2020 / இ1 )**

## பொருள் எண் – 03

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு பொது நிதியின் கீழ் ரூ. 27.20 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி எல்லையில் உள்ள தெருவிளக்குகள் பராமரிக்கும் பணிக்கு, கள்ளக்குறிச்சி நகராட்சி மன்ற தீர்மானம் எண். 45, நாள். 28.06.2018 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண். 5878/2020DO1 நாள் 02.12.2020இல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, அதற்கிணங்க பணி மேற்கொள்வதற்கு 13.01.2021 ஆம் தேதியன்று ONLINE / OFFLINE முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், ONLINE முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறாததால், OFFLINE முறையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தினை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் அமைக்கப்பட்டுள்ள தெரு மின் விளக்குகளை பராமரிக்கும் பணி மேற்கொள்ளுதல் | ரூ. 27.21 | **M/s P&B Enterprises, Erode** | **+ 5.00% மதிப்பீட்டிற்கும் அதிகம்** |
| | | | M/s.J.P.Constructions, Namakkal | +7.02% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

மேலும் கூடுதலான பொருட்கள் விநியோகம் செய்ய ஒப்புதல் பெறப்பட்ட இனங்களும் திருவாளர் P&B Enterprises, Erode அவர்களால் கொடுக்கப்பட்ட விலைப்புள்ளி குறைவாக உள்ளது. மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டைவிட கூடுதலான விலை விகிதத்தில் இரு ஒப்பந்ததாரர்களும் ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளனர். மேலும், வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி +5.00% மதிப்பீட்டைவிட கூடுதலாக அளித்துள்ள "**M/s. P&B Enterprises, Erode**" என்ற நிறுவனத்தாரை L1 ஒப்பந்ததாரராக கருதி, விலைக்குறைப்பு செய்துதர 13.01.2021 அன்று கோரியதில், 18.01.2021 அன்று ஒப்பந்ததாரர் அளித்துள்ள கடிதத்தில், +**5.00%**-லிருந்து அனைத்து இனங்களுக்கும் மதிப்பீட்டைவிட கூடுதலாக **4.79%**-க்கு செய்து தர சம்மத கடிதம் கொடுத்துள்ளார். மேலும், விலை குறைப்பு செய்துதர, **18**.01.2021 அன்று ஒப்பந்ததாரரை கோரியதில், **21**.01.2021 அன்று ஒப்பந்ததாரர் அளித்துள்ள கடிதத்தில், தற்போதுள்ள கட்டுமான பொருட்களின் விலையேற்றம், பணிபுரியும் பணியாளர்களின் ஊதிய உயர்வின் காரணமாக, **+4.79%**-லிருந்து அனைத்து இனங்களுக்கும் மதிப்பீட்டைவிட கூடுதலாக **+4.69%**-க்கு செய்து தர இறுதியாக குறைத்து சம்மத கடிதம் கொடுத்துள்ளார். மேலும் இதற்கு குறைத்து பணியினை செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்.

எனவே, திட்டப்பணியின் அவசர, அவசியத்தினை கருதி, மதிப்பீட்டைவிட கூடுதலாக **+4.69%**-க்கு ஒப்பந்தப்புள்ளி (சம்மத கடிதம்) அளித்துள்ள, "**M/s. P&B Enterprises, Erode**" என்ற நிறுவனத்தாரின்

ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. "**M/s.P&B Enterprises, Erode**" என்ற நிறுவனத்தார் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி (சம்மத கடிதம்) விலை விகிதம் மதிப்பீட்டைவிட கூடுதலாக **+4.69%** என்ற விலைவிகிதத்தினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
3. இப்பணியில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் அனுமதிக்கப்பட்ட கூடுதல் இனங்களை தேவைக்கு ஏற்றாற்போல வாங்கவும், இதற்கான தொகையினை இனம்வாரியாக குறைந்த விவிகிதம் அளித்த திருவாளர் P&B Enterprises, Erode வழங்கவும், இதற்கான செலவின தொகைக்கு. அனுமதிக்கலாம்.
4. மேற்படி பணிக்கு கூடுதலாகும் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். / 2020 / இ1 )**

## பொருள் எண் –04

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தில், திடகழிவு மேலாண்மை **2018–2019**இன் கீழ் உயிரிய செயலாக்கம் முறையில் (Bio-mining) துருகம் சாலையில் உள்ள குப்பை சேகரிக்கும் கிடங்கில் குப்பைகளை பிரித்தெடுத்து இடத்தினை மீளப் பெறப்படும் பணிக்கு ரூ.**175.00** இலட்சம் மதிப்பீட்டிற்கு **04.10.2018**இல் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் குறைவான விலைவிகிதம் கொடுத்த M/s A.R.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், நெடுவலூர், கெங்கவல்லி, சேலம் மாவட்டம் என்ற நிறுவனத்திற்கு **09.11.2018**இல் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி நிறுவனம் நாளது தேதி வரையில் மேற்படி திட்டப்பணியில் போதிய முன்னேற்றம் காண்பிக்கப்படாமல் மெத்தன போக்கில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டப்பணியின் அவசரசம், அவசியம் கருதி பணியினை விரைந்து முடிக்கக் கோரி, இந்நகராட்சி மூலம் முறையே **23.04.2019, 20.01.2020, 24.11.2020, 03.12.2020, 06.01.2021** மற்றும் **11.01.2021** ஆகிய தேதியில் அறிவிப்பு வழங்கியும், பலமுறை நேரில் அறிவுறுத்தியும், பணியில் எவ்வித முன்னேற்றம் இல்லாமல் இருப்பதோடும் வழங்கப்பட்ட அறிவிப்புகளுக்கு எந்தவித விளக்கமும் பெறப்படவில்லை. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் நியமிக்கப்பட்ட அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர்கள் குழுவால் (PIU) தெளிவுரைகளை பின்பற்றி பணி மேற்கொள்ளப்படாமலும் பணி முன்னேற்றத்திற்கான எந்தவித முனைப்பும் காட்டாமல் இருந்து வருகிறது.

எனவே நிர்வாக நலன் கருதியும், ஒப்பந்த விதிமுறைகளின்படியும் மேற்படி ஒப்பந்ததாரர் M/s A.R.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், நெடுவலூர், கெங்கவல்லி, சேலம் மாவட்டம் என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவினை இரத்து செய்தும், மறு ஒப்பந்தப்புள்ளி கோர ஆகும் செலவினத்தினையும், பின்வரும் காலங்களில் ஏற்படும் நிதியிழப்பிற்கும் இந்நிறுவனத்தை பொறுப்பாக்கி அதற்கான தொகையினை நிறுவனம் செலுத்திய முன்வைப்பு தொகையினை பறிமுதல் செய்தும் இப்பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. M/s A.R.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், நெடுவலூர், கெங்கவல்லி, சேலம் மாவட்டம் என்ற நிறுவனத்தின் பணி உத்தரவினை இரத்து செய்து உத்தரவிட மன்றம் அனுமதிக்கலாம்.
3. M/s A.R.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், நெடுவலூர், கெங்கவல்லி, சேலம் மாவட்டம் என்ற நிறுவனத்தால் செலுத்தப்பட்ட முன் வைப்புத்தொகையினை பிடித்தம் செய்து ஈடு செய்துக் கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. திட்டப்பணியின் அவசர, அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும், மேற்படி பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோர மன்றம் அனுமதிக்கலாம்.

(நக.எண் இ1/2021/ 2220 )

## பொருள் எண் –05

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு பேரிடர் மேலாண்மை நிதி (SDRF) நிவர் புயல் **2020**ஆம் ஆண்டிற்கு கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு **12.01.202** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1 | ராஜா திரையரங்கம் அருகில் உள்ள சாலையினை சீரமைப்பு செய்தல் (வார்டு எண் 05) | ரூ.5,00,000/– | திரு என்.கணேசன் கள்ளக்குறிச்சி | ரூ.4,39,298/– 0.09% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| 2 | | | M/s ஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | ரூ.4,43,525/– 0.87% மதிப்பீட்டிற்கும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | அதிகம் |

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் 0.09% மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு என்.கணேசன், கள்ளக்குறிச்சி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 2817/2020/இ1)

## பொருள் எண் –06

கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலகத்தில் உள்ள பொது, வருவாய், நகரமைப்பு ஆகிய பிரிவுகளுக்கு தேவையான டேபிள், சேர், பீரோ மற்றும் இதர உபகரணங்கள் வாங்கி கொள்ளவும், ஆய்வுக்கூட்டம் நடத்த ஏதுவாக நெகிழியிலான இருக்கைகள் 200 எண்ணிக்கையில் வாங்கி கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. பணியின் அவசர, அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும், மேற்படி கொள்முதல் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான டான்சி நிறுவனத்தில் இருந்து பெற்று கொள்ள பணி ஆணை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கொள்ளப்படும் செலவின தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும்

(ந.க.எண் சி1/2021/192 )

## பொருள் எண் –07

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான தினசரி காய்கறி மார்க்கட் பகுதியில் 240 கடைகள் உள்ளன. அதில் மளிகை பொருட்கள் விற்பனை, காய்கறிகள் மற்றும் பொது மக்களுக்கு தினசரி பயன்படும் அத்தியாவசிய பொருட்கள் வாங்க வந்து செல்லும் பொது மக்களின் வாகனங்களை நிறுத்த சிரமமாக உள்ளது. எனவே, நாளங்காடியில் டிரான்ஸ்பார்ம் அருகில் காலியாக உள்ள நகராட்சிக்கு சொந்தமான காலியான இடத்தில் இருச்சக்கர வாகன நிறுத்துமிடம் அமைத்தால் பொது மக்களின் பயன்பாட்டிற்கும், போக்குவரத்து இடைஞ்சல் இல்லாமல் இருக்கும். மேலும் இதன் மூலம் நகராட்சிக்கு ஆண்டுக்கு தோராயமாக ரூ.20,00,000/– வரை நிரந்தரமாக வருமானம் கிடைக்கும் என்பதாலும் மேற்படி இடத்தில் தனி நபர் ஆக்கிரமிப்பு போன்றவை தடுக்கப்படும் என்பதாலும் மேற்படி இடத்தில் பொது மக்களுக்கு ஏற்ற வகையில் இரு சக்கர வாகன நிறுத்திமிடம் அமைக்க ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்து பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. பணியின் அவசர, அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும், பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கொள்ளப்படும் செலவின தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(நக.எண் இ1/2021/ 193 )

## பொருள் எண் –08

நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் தொற்று நோய்களான டெங்கு, சிக்கன் குனியா போன்ற வைரஸ் நோய் தடுப்பு பணிகளுக்கு 47 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகரப் பகுதியில் உள்ள பொது மக்களுக்கு இந்நோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும், திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 குறிப்பிட்டுள்ளவாறு மக்கும் குப்பை, மக்காத குப்பை எவ்வாறு தரம் பிரித்து தூய்மை பணியாளர்களிடம் வழங்கப்பட வேண்டும் எனவும் விழிப்புணர்வு ஏற்படுத்தி பொதுமக்களுக்கு தொற்று நோய் குறித்து அறிந்திடவும், குப்பைகள் தரம் பிரித்து வழங்கப்படுவதால் இந்நகராட்சி தூய்மையான நகராட்சியாக செயல்படுத்திட ஏதுவாக நகரப் பகுதியில் அனைத்து வார்டுகளிலும் உள்ள பொதுமக்களுக்கு நன்கு அறியும் வண்ணம் மேற்கண்டவாறு உள்ள பணிகளுக்கு ஸ்டிக்கர், சுவரொட்டிகள் மூலம் கொள்முதல் செய்து விழிப்புணர்வு ஏற்படுத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.50 (ரூபாய் ஐந்து லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும் ) இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசரஅவசியம் கருதிவிலைப்புள்ளிகோரிபணிகள்மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3.பணிமேற்கொண்டு பட்டியல் கிடைக்கப்பெற்றவுடன் துப்புரவுஆய்வாளர் சான்றுபெற்றவுடன் பட்டியல் தொகையைநகராட்சிபொதுநிதியிலிந்துவழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2870/2020 / எச்1)**

## பொருள் எண் – 09

நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் தேவையான டியோடிசைன் மருந்து சப்ளை செய்யும் பணிக்கு பொது சுகாதா ரபணியின் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் 21.01.2021 அன்று கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | டியோடிசைன் மருந்து 1 லிட்டர் தொகை ரூ. | மதிப்பீடு |
|---|---|---|---|
| 1 | **M/s.Shivam Traders, Mogappair, Chennai** | **800.00** | **குறைவு** |
| 2 | M/s.Thirumurugan Traders, Namakkal | 850.00 | அதிகம் |

**அலுவலக குறிப்பு:-**

1.மேற்கண்ட 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள**M/s.Shivam Traders, Mogappair, Chennai**என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2.இச்செலவினத்தை நகராட்சிபொதுநிதியிலிந்துமேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3009 /2020/எச்1)**

## பொருள் எண்– 10

நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் தேவையான புகை மருந்து இயந்திரம் மற்றும் சிலிண்டர்கள் சப்ளைசெய்யும் பணிக்கு பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் 21.01.2021 அன்றுகோரப்பட்டதில்பெறப்பட்டஒப்பந்தப்புள்ளிகளைமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விபரம் | எண்ணிக்கை | M/s.NR Traders, Edayapalayam | M/s.Amudha Agencies, Kurumbapalayam |
|---|---|---|---|---|
| 1 | 5லிட்டர் கொள்ளவு கொண்ட புகை மருந்து இயந்திரம் | 1 Nos | **92000.00** | 94000.00 |
| 2 | 2லிட்டர் கொள்ளவு கொண்ட புகை மருந்து இயந்திரம் | 1 Nos | **27500.00** | 29000.00 |
| 3 | 1 லிட்டர் கொள்ளவு கொண்ட சிலிண்டர் | 1 Nos | **290.00** | 340.00 |

**அலுவலக குறிப்பு:-**

1.மேற்கண்ட 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்தஒப்பந்தப்புள்ளிகொடுத்துள்ள**M/s.NR Traders, Edayapalayam**என்றநிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியைஏற்றுபணிஉத்தரவுவழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2.இச்செலவினத்தை நகராட்சிபொதுநிதியிலிருந்துமேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2996 /2020/எச்1)**

## பொருள் எண்– 11

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் ஒரு கணினி மட்டுமே பயன்பாட்டில் உள்ளது. தற்சமயம் இப்பிரிவில் மதிப்பீடுகள், பிரேரணைகள், ஒப்பந்தப்புள்ளியினை E-Tenderஇல் பதிவேற்றம், மற்றும் அலுவலர்களுக்கு தனித்தனியே login மூலம் பணிகள் செய்ய வேண்டியுள்ளதாலும், பொறியாளர் அவர்கள் பணிகள் சம்மந்தப்பட்ட கலந்தாய்வு கூட்டத்தினை காணொலி காட்சி மூலம் கலந்து கொள்ள வேண்டியுள்ளதாலும், பொறியாளர் அவர்களுக்கு All in one கணினி 1 எண், பணி மேற்பார்வையாளர், மேசைக்கு கணினி 1 எண் லேசர் பிரிண்டர் தேவைப்படுகிறது. மேற்கண்ட கணினிகள் வாங்க தோராய மதிப்பீடு ரூ.1,45,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி கணினி, லேசர் பிரிண்டர் ஆகியவை வாங்க ஆகும் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் இ1 / 2020 / 186)

## பொருள் எண்–12

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொறியியல் பிரிவில் பராமரிக்கப்படும் ஈப்பு வாகனம் 2 எண்ணிக்கை, தெரு மின் விளக்கு பராமரிப்பு வாகனம் ஒன்று மற்றும் பொது மக்களுக்கு குடிநீர் வழங்கும் வாகனம் ஒன்று என மொத்தம் நான்கு வாகனங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி வாகனங்களை பழுது நீக்கம் செய்தல், தகுதி சான்று வழங்குதல், வாகன காப்பீடு செலுத்த வேண்டியுள்ளதால் மேற்படி வாகனங்களுக்கு தகுதி சான்று ஆயுள் காப்பீடு மற்றும் பழுது நீக்க பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/. (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்)–க்கு நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஆயுள் காப்பீடு செலுத்த பெறப்படும பட்டியலின்படி தொகையினை செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. தகுதி சான்று பெற உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்
4. பெறப்பட்ட பட்டியல் தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் இ1/2020/187)

## பொருள் எண் –13

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வரும் திரு ஆர்.செந்தமிழ்செல்வன் என்பவர் கடந்த 15.05.1998இல் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வந்த நிலையில் 01.03.2006 முதல் ஊதிய ஏற்ற முறையில் கொண்டு வரப்பட்டுள்ளார். 15.05.1998 முதல் 28.02.2006 வரை உள்ள காலத்திற்கான நிலுவை தொகை வழங்கக் கோரி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண் W.P.No. 24552/ 2019ல் வழக்கு தொடர்ந்துள்ளார். தீர்ப்புரையின்படி 08.01.2020ன்படி ஆறு வார காலத்திற்குள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்படி மேற்படி வழக்கு எண் 24552/2019க்கான 08.01.2020ஆம் தேதிய தீர்ப்பினை எதிர்த்து மேல் முறையீடு செய்து அதன் அறிக்கையினை அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டள்ளதை தொடர்ந்து WA SR No 37065/2020இன்படி மேல் முறைட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி மேல் முறையீட்டு வழக்கிற்கு நகராட்சி சார்பாக ஆஜராகும் அரசு வழக்கறிஞர் திரு லூர்துபவுல் மெளரியா, சென்னை என்பவருக்கு வழக்கு கட்டணமாக (அனைத்து கட்டணங்களும் உள்பட) ரூ.28992/– (ரூபாய் இருபத்தெட்டாயிரத்து தொள்ளாயிரத்து தொன்னூற்று இரண்டு மட்டும் ) செலுத்த வரப்பெற்ற மன்றத்தின் பார்வைக்கும், அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. வழக்கின் அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும், வழக்கு கட்டணத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் இ1/2021/ 188)

## பொருள் எண் –14

கள்ளக்குறிச்சி நகராட்சியில் 2020–2021ஆம் ஆண்டுக்கு அலுவலகத்தில் பயன்பாட்டில் உள்ள கணினிகள், பிரிண்டர்கள் Dot matrix printer ஆகியவை என 30 எண்ணிக்கையில் செயல்பாட்டில் உள்ளது. அதற்கு தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்யவும், பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. விலைப்புள்ளி கோரி பணி ஆணை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பட்டியல் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் இ1/2021/ 189 )

## பொருள் எண் –15

கள்ளக்குறிச்சி நகராட்சியில் 2021–2022ஆம் ஆண்டுக்கு அலுவலகத்தில் பயன்பாட்டில் உள்ள குளிர் சாதன இயந்திரங்கள் 12 எண்ணிக்கையில் செயல்பாட்டில் உள்ளது. பழுது ஏற்படும் குளிர்சான இயந்திரங்களுக்கு தேவையான உபகரணங்களுடன் சரி செய்யவும் அதற்கான வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. விலைப்புள்ளி கோரி பணி ஆணை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பட்டியல் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(நக.எண் இ1/2021/ 190 )

## பொருள் எண் –16

கள்ளக்குறிச்சி நகராட்சியில் 2021–2022ஆம் ஆண்டுக்கு அலுவலகத்தில் பயன்பாட்டில் உள்ள 18 கணினிகள், 15 பிரிண்டர்களுக்கு தங்கு தடையின்றி செயல்படும் வகையில் தடையில்லா மின்சாரம் வழங்கும் இயந்திரம் (Un-interuptted power supply – UPS) ஒன்று செயல்பாட்டில் உள்ளது. உயர் மின் அழுத்த மின்தடை ஏற்படும்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்ய வேண்டியுள்ளதால் மேற்கண்ட UPSக்கு தேவையான உபகரணங்களுடன் வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. விலைப்புள்ளி கோரி பணி ஆணை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பட்டியல் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(நக.எண் இ1 /2021 / 191 )

## பொருள் எண் –17

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் குப்பை சேகரம் செய்ய ஏதுவாக டம்பர் பிளேசர் வண்டி எண் TN 32 AU 1335 பயன்பாட்டில் இருந்தது. பின்னர் தற்போது குப்பைகளை கொண்டு மக்கு உரத்திடலில் கொண்டு சேகரம் செய்வதை தவிர்த்து மக்கும் குப்பை மக்காத குப்பை என தரம் பிரித்து சேகரம் செய்யப்படுகிற காரணத்தினால் மேற்படி வாகனம் பயன்படுத்தப்படாமல் உள்ளது. இந்நகராட்சி பகுதியில் நகராட்சிக்கு சொந்தமாக 29 சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் 2 பொது கழிப்பிடங்கள் உள்ளது. அக்கழிப்பிடங்களில் அமைக்கப்பட்டுள்ள செப்டிக் டேங்க்குகள் அடிக்கடி நிரம்பி விடுகிற காரணத்தினால் தனியார் மூலம் செப்டிக் டேங்க் நீரினை வெளியேற்ற செலவினம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே வாங்கி பயன்படுத்தப்பட்டு தற்போது பயன்படுத்தாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள டம்பர் பிளேசர் வாகனத்தினை கழிவு நீர் சுத்தம் செய்யும் லாரியாக மாற்றி பயன்படுத்தினால் நகராட்சிக்கு சொந்தமான கழிவறைகள், பொது கழிவறைகள் மற்றும் நகராட்சி அலுவலகத்தில் உள்ள கழிவறை ஆகியவற்றை சுத்தம் செய்ய பயன்படுத்திக் கொள்ள இயலும். எனவே, மேற்படி டம்பர் பிளேசர் வாகனத்தினை செப்டிக் டேங்க் சுத்தம் செய்யும் வாகனமாக மாற்ற ஆகும் உத்தேச செலவினம் ரூ.15,00,000/–(ரூபாய் பதினைந்து லட்சம் மட்டும்) நிர்வாக அனுமதிக்கு வைக்கப்பபகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. அத்தியாவசிய பணியான செப்டிக் டேங்க் சுத்தம் செய்யும் பணிக்கு ஏதுவாக பயன்படுத்தாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள டம்பர் பிளேசர் வாகனத்தினை செப்டிக் டேங்க் சுத்தம் செய்யும் வாகனமாக மாற்றி பயன்பாட்டிற்கு கொண்டு வர ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
3. வரப் பெறும் பட்டியல் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(நக.எண் இ1 /2021 / )

## பொருள் எண் –18

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் பயன்படுத்தப்படும் கீழ்க்கண்ட விபரப்படி உள்ள அனைத்து வாகனங்களுக்கும் 2021–2022 ஆம் ஆண்டிற்கு காப்பீடு புதுப்பிக்கும் பொருட்டு அவ்வப்போது பெறப்படும் பட்டியல்களுக்கு தொகை வழங்கி காப்பீடு புதுப்பிக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வாகன எண் | வாகன விபரம் |
|---|---|---|
| 1 | TN32U8542 | 2005/LORRY/ SWARAJ MAZDA LTD |
| 2 | TN32AV0727 | 2012/JCB/BEML LIMITED |
| 3 | TN32AV1335 | 2012/DUMBER PLACER/ ASHOK LEY LAND |
| 4 | TN15S7421 | 2017/LCV/ TATA MOTARS LTD |
| 5 | TN15S7454 | 2017/LCV/ TATA MOTARS LTD |
| 6 | TN15P3121 | 2019/LCV/ TATA MOTARS LTD |
| 7 | TN15P3168 | 2019/LCV/ TATA MOTARS LTD |
| 8 | TN15P3133 | 2019/LCV/ TATA MOTARS LTD |
| 9 | TN32AV0552 | 2012 / LORRY / ASHOK LEY LAND |

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 534 / 2020 /எச்1)**

## பொருள் எண்–19

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொது சுகாதார வாகனம் எண்.TN32AV0552ன் தகுதி சான்று **06.02.2021**ம் தேதியன்று முடிவடைவதால் வாகனத்திலுள்ள பழுதுகளை நீக்கம் செய்ய வேண்டியுள்ளதாலும்,மேற்படி வாகனம் அசோக் லேலேண்ட் கம்பெனியை வகையை சார்ந்ததால் விழுப்புரம் TVS நிறுவனத்திடம் கொண்டு சென்று மேற்படி வாகனத்துலுள்ள பழுதுகளை நீக்கம் செய்து கொள்ளவும், பழுதுகளை நீக்கம் செய்து பெறப்படும் பட்டியல் தொகையினை வழங்கவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி TVS விழுப்புரம் என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.எச்1/ 125 /2021)**

## பொருள் எண் –20

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண்.TN15P3168 என்ற வாகனம் கடந்த **05.01.2021**ம் தேதியன்று பணிகள் முடிக்கப்பட்டு துருகம் சாலையில் உள்ள நகராட்சி நுண் உரமையத்திலிருந்து அலுவலகத்திற்கு வரும் போது நகராட்சி எல்லைக்குட்பட்ட துருகம் சாலையில் எதிரே வந்த டாடா ஏசி வாகன எண்.TN23 CJ 6365 என்ற வாகனத்தின் ஓட்டுநர் அஜாக்கிரதையாக ஓட்டி வந்து மேற்கண்ட நகராட்சி வாகனம் மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. மேலும், இது குறித்து காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு காவல் துறையினரது சமூக சேவை பதிவு (CSR) வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்தின் பழுதுகள் சரி செய்து உரிய தொகையினை ஆயுள் காப்பீடு நிறுவனத்திடம் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் தற்போது பணியின் அவசர அவசியம் கருதி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்ய உள்ளூர் நிறுவனத்திடம் பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.**1.00** லட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் பொது மக்களின் நலன் கருதியும் விலைப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்
3. பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் பின்னர் காப்பீடு நிறுவனத்தில் பெறப்படும் தொகையினை மீண்டும் நகராட்சி வருவாய் நிதிக்கு பற்று வைக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.எச்1/ 025 /2021)**

**த□ அலுவல□**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**